*கவனிக்க.-2022.12.02 ஆந் திகதிய 2309 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ), பகுதி I: தொகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2310 - 2022 දෙසැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2022.12.09

*2310 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 346 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 349 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2022, திசெம்பர் மாதம் 30ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, திசெம்பர் மாதம் 16ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


345- B 082408 - 353 (2022/12)

# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு - 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மேல் மாகாண சபையின், களுத்துறை மாவட்டத்தில், இங்கிரிய பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் சமந்திகா பிரியதர்சனீ லியனகே ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதிஉத்தம சனாதிபதி அவர்களால் 1996.07.02 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள களு.ப்ர.ஹொ.1385 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான இரத்மள்கொட என்னும் முகவரியில் வசிக்கும் எளமுல்லகே சொபிநோனா என்பவருக்குக் கையளிக்கப்பட்டு பாணந்துறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்.டீ.ஓ. 33/ 07 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.10.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன்.இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2023.01.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

களுத்துறை நிர்வாக மாவட்டத்தின் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவின் உடுகஹ/ ரைகம் பற்றில்/ கோறளையிலுள்ள 621ஏ - இரத்மல்கொட கிழக்கில் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இரத்மல்கொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு மு.பீ.க. 1905 ஆம் ˙இலக்க துண்டு பிரிக்கும் வரைதலில் 54 ஆம் ˙இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.254 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : மு.பி.கே. 1905 இல் காணித்துண்டு இலக்கம் 53, 44;
கிழக்கு : மு.பி.கே. 1905 இல் காணித்துண்டு இலக்கம் 53, எடுராகல மூகலான;
தெற்கு : மு.பி.கே. 1905 இல் காணித்துண்டு இலக்கம் 55;
மேற்கு : மு.பி.கே. 1905 இல் காணித்துண்டு இலக்கம் 44, இரத்மல்கொடகம;
.

சமந்திகா பிரியதர்சனீ லியனகே,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
இங்கிரிய,
2022.01.28.

12- 272

---

இணைப்பு - 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சப்பிரகமுவ மாகாண சபையின், கேகாலை மாவட்டத்தில், ரம்புக்கனை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் டப். எல். ஆர். இந்திக்க லியனகே ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைகள் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆளுநர் அவர்களினால் 1940.10.29 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்டுள்ள கே.ஜீ.142 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கப்புகந்த மூக்கலான குடியேற்றத்தில் வசிக்கும் கங்கானமலே புஞ்சிரால என்பவருக்கு கையளிக்கப்பட்டு கேகாலை மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் KG 142 இன் கீழ் 1941.08.07 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளராக உரித்தாளர் ஒருவர்˙இன்மையினால் அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விரும்பாத காரணத்தினால் பின்னுரித்துக்கு ஒருவரும்

*நியமிக்கப்படவில்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளமையினால் குறித்த அளிப்புப் பத்திரத்தை, மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்தல் செய்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2023.01.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*கேகாலை நிர்வாக மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவில் வல்கம பத்துவவில் புவக்மொட்டை கிராம அலுவலர் பிரிவில் புவக்மொட்டை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், கேகாலை நில அளவை அத்தியட்சகரின் பொறுப்பில் இருக்கின்ற நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட களப்பத்திரம் 1 இறுதிக் கிராம வரைபட இலக்கம் 150 இல் காணித்துண்டு இலக்கம் 117 கொண்ட 00ஏக்கர் 03 றூட் 17 பேர்ச் விஸ்தீரணம் கொண்டதுமான கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளதுமான அரச காணி கப்புகந்தமுக்கலான.*

வடக்கு : குடியேற்ற வீதி;
கிழக்கு : குடியேற்ற வீதி;
தெற்கு : காணித் துண்டு இலக்கம் 122;
மேற்கு : ஆ.வ.ப.153;

டபிள்யூ. எல். ஆர். இந்திக்க லியனகே,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ரம்புக்கனை,
2022.08.12.

12- 273/1

---

இணைப்பு - 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*சப்பிரகமுவ மாகாண சபையின், கேகாலை மாவட்டத்தில், ரம்புக்கனை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் டப். எல். ஆர். இந்திக்க லியனகே ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களினால் 1996.05.29ஆந் திகதி அளிப்பு செய்யப்பட்டுள்ள கே./பிரா/13004ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான வெரமுகொல்ல குடியேற்றத்தில் வசிக்கும் கொஸ்ஸின்ன கங்கானமலாகே பொடிநோனா ( திருத்தப்பட்ட பெயர் கும்பல்கம கங்கானமலாகே லீலாவத்தீ மெணிகே) என்பவருக்கு கையளிக்கப்பட்டு கேகாலை மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் ரஜ/6/82 இன் கீழ் 1996.06.11 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளராக உரித்தாளர் ஒருவர் இன்மையினால் அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விரும்பாத காரணத்தினால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கைபடுத்தப்பட்டுள்ளமையினால் குறித்த அளிப்புப் பத்திரத்தை, மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்தல் செய்கின்றேன். இது தொடர்பாக ஏதேனம் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2023.01.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*கேகாலை நிர்வாக மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவில் தெயாலதஹமுன பத்துவவில் மங்கலகம கிராம அலுவலர் பிரிவில் வராகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், கேகாலை நில அளவை அத்தியட்சகரின் பொறுப்பில் இருக்கின்ற நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பீ.பீ. 761 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 20 கொண்ட 01ஏக்கர் 00 றூட் 31 பேர்ச் விஸ்தீரணம் கொண்டதுமான கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளதுமான அரச காணி வெரமுகொல்ல குடியேற்றம்.*

வடக்கு : பீ.பீ.ஏ. 761 வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 16;
கிழக்கு : மேலே வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 21;
தெற்கு : மேலே வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 34 மற்றும் 36;
மேற்கு : மேலே வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 18 மற்றும் 19;

டபிள்யூ. எல். ஆர். இந்திக்க லியனகே,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ரம்புக்கனை,
2022.05.24.

12- 273/2

---

இணைப்பு - 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உபபிரிவுக்கேற்ப 1999 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05ஆந் திகதிய இலக்கம் 544, வலதுகரை குடாகம் 03, பராக்கிரமபுர, திஸ்ஸமகாராம எனும் முகவரியில் வசிக்கும் பாலயத்தெஹிகே குணதாச என்பவருக்கு ஹம்/ 11/ ப்ர/ 40262 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் செய்யப்பட்டு அம்பாந்தோட்டை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1998.07.27 ஆந் திகதிய ஹம்/ 95/ 2396/ 98 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால்,/ இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை என தென் மாகாண சபைக்குட்பட்ட லுனுகம்வெஹர பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் இசங்க லக்மல் விக்ரமநாயக ஆகிய நான், இத்தால் அறியத்தருகின்றேன். ஆதலால், கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை இரத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2022.01.06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட - இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து அரச நில அளவையாளரினால் நிர்மாணிக்கப்பட்ட - இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 649 (விவசாய காணி) எனக் காட்டப்பட்டுள்ளதும், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட லுனுகம்வெஹர பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மாகம பற்று/ கோரளையிலுள்ள பராக்கிரமபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வலதுகரை குடாகம் 03 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 01 றூட் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி. இதன்எல்லைகள் வருமாறு.-

வடக்கு : இலக்கம் 51, வயற் கால்வாய்;
கிழக்கு : 650 வயற் கால்வாய்;
தெற்கு : வழிந்தோடும் கால்வாய்;
மேற்கு : 648 வயற்காணி.

ஐ. எல். விக்ரமநாயக்க,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
லுணுகம்வெஹெர,
2022.10.10.

12- 283

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/58297.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NP/ 28/ 04/ 2/ SLO/ 44/1344.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான முல்லைத்தீவு தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த உண்ணாப்பிளவு கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் குடியேற்ற உத்தியோகத்தரினால் வரையப்பெற்ற நில வரைபடத்திற்கு ஏற்றவாறு 10 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு முல்லைத்தீவு மாவட்ட ஓய்வு பெற்றோரின் நலன்புரிச்சங்க நம்பிக்கைச் சபை என்னும் பெயரில் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பிரதேச செயலகத்தின் பகுதி;
கிழக்கு : சமுர்த்தி வங்கியின் பகுதி;
தெற்கு : பாதை;
மேற்கு : பாதை.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு விடலாம். இதன் பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினை குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-ஐந்து (05) வருடங்கள் 2022.10.05ஆந் திகதி முதல் 2027.10.04 வரை) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 1/2 % ஆகும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது.;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்பட்டதாகும் ;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.;

(எ) 2022 ஆம் ஆண்டு முதல் 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் துணைக்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் என்பன தவிர வேறு துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது.;

(ஏ) குத்தகைப் பணத்தினை இடைவிடாது செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சடத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக் கூடாதென ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு விடப்படும்.

கே.ஆர்.மெத்மா ரணசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.11.22.

12- 219

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/58295.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NP/ 28/ 04/ 2/ SLO/ 44/1366.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான அலம்பில் வடக்கு கிராம அலுவலர்

பிரிவைச் சேர்ந்த அலம்பில் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தரினால் வரையப்பெற்ற நில வரைபடத்திற்கு ஏற்றவாறு 20 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை சங்க நடவடிக்கைகளின் பொருட்டு முல்லைத்தீவு தெற்கு தென்னை மற்றும் பனை பயிர்ச்செய்கை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பாதை;
கிழக்கு : பாதை;
தெற்கு :அரச காணி;
மேற்கு : அரச காணி.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு விடலாம். இதன் பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினை குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-ஐந்து (05) வருடங்கள் 2022.10.05ஆந் திகதி முதல் 2027.10.04 வரை) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் வருடத்தில் காணியின் அதிகரிக்காத பெறுமதியின் 2 % ஆகும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை சங்க நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது.;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்பட்டதாகும் ;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.;

(எ) 2022 ஆம் ஆண்டு முதல் 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் துணைக்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் என்பன தவிர வேறு துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது.;

(ஏ) குத்தகைப் பணத்தினை இடைவிடாது செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக் கூடாதென ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு விடப்படும்.

கே.ஆர்.மெத்மா ரணசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.11.22.

12- 218

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/64594.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NP/ 28/ 04/ 2/ SLO/ 44/1694.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கோயில் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கோயில்குடியிருப்பு கிராமத்தின் துண்டுகளாக்கும் திட்டத்தின் காணித்துண்டு இலக்கம் K. 01 றூட், 10 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு இலங்கை வங்கி - கோயில்குடியிருப்பு என்னும் பெயரில் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பாதை;
கிழக்கு : பிரதான வீதி (A34) ;
தெற்கு : கோப்சிட்டி கட்டடம் (காணித்துண்டு J) ;
மேற்கு : பாதை.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு விடலாம். இதன் பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினை குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-ஐந்து (05) வருடங்கள் 2022.10.05ஆந் திகதி முதல் 2027.10.04 வரை) ;

**வருடாந்தக் குத்தகை.**- 2022 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5, 000,000) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,00,000) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைச் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை வர்த்தக நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது.;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 1 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்பட்டதாகும் ;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.;

(எ) 2022 ஆம் ஆண்டு முதல் 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் துணைக்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் என்பன தவிர வேறு துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது.;

(ஏ) குத்தகைப் பணத்தினை இடைவிடாது செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சடத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக் கூடாதென ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு விடப்படும்.

கே.ஆர்.மெத்மா ரணசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.11.22.

12- 220

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.